
# Aayvagam

*an International Journal of Multidisciplinary Research*

Volume No. 4 | Issue 8 | September 2016

*Special issue on International Conference on Creations and Creators Personality*



Scanned by CamScanner

## உள்ளடக்கம்


| எண் | விவரம் | பக்கம் |
|---|---|---|
| 1 | நாட்டுப்புற தெய்வ திருவிழாக்களில் பன்முக ஆளுமை, க. அலமேலுமங்கை | 4 |
| 2 | அண்ணாதுரையின் "வேலைக்காரி" நாடகம் காட்டும் சமுதாயச்சிந்தனைகள், முனைவர்: சு. அன்புச்செழியன் | 8 |
| 3 | வெற்றி வேற்கை கூறும் அறக்கருத்துக்கள், முனைவர் க. சகாய கிரேஸி | 11 |
| 4 | ஸ்ரீநம்மாழ்வாரின் படைப்பாளுமை , முனைவர் க. சிவனேசன் | 14 |
| 5 | ஃப்ராய்டின் கலை இலக்கியச் சிந்தனைகள் மறுப்புகளும் விளக்கங்களும், சு. இளங்கோ | 18 |
| 6 | சிலப்பதிகாரத்தில் கற்பு, செல்வி. சௌ. ஜான்சிராணி | 26 |
| 7 | காரைக்கால் அம்மையாரின் மொழி ஆளுமை, பழ. மல்லிகா | 30 |
| 8 | அடைகளாற் சுட்டப்படும் பதிற்றுப்பத்துத் தலைப்புகள, பி. கார்த்திகா | 33 |
| 9 | கழார்க்கீரன் எயிற்றியார் பாடல்களில் மொழியும் நடையும், பெ. ரேவதி | 36 |
| 10 | குறிஞ்சிப்பாட்டு காட்டும் இயற்கை, முனைவர் க. அழகர் | 43 |
| 11 | அம்மூவனாரின் மொழி ஆளமை, சா. மங்களேஸ்வரி | 46 |
| 12 | கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மருத்துவரின் ஆ ளுமை, சு. முத்தையா | 49 |
| 13 | கல்வியியல் விழுமங்கள், திருமதி: கோ. சங்கரம்மாள் | 53 |
| 14 | தொல்காப்பிய நெறியில் திருக்குறள், கி.சங்கீதா | 55 |
| 15 | கல்வெட்டில் சிறப்புப் பெயர் நிலைபெறும் சூழல்கள், ந. அருள்மொழி | 58 |
| 16 | பாரம்பரியமிக்க சிறுதானியங்கள், க. பிரபாவதி | 62 |
| 17 | புறநானூற்றில் தத்துவம், முனைவர் வி. கலாவதி | 65 |
| 18 | வைணவ உரைகளின் சிறப்பியல்புகள, பேரா. செ. ஜகந்நாத் | 68 |
| 19 | புலிநகக் கொன்றையில் பி.ஏ. கிருஷ்ணன் அவர்கள் கையாண்ட உத்திகள், வை. விஜயலெட்சுமி | 71 |
| 20 | எட்டுத்தொகையில் பகற்குறி, ரோ.ஜெயலட்சுமி | 74 |
| 21 | கபிலர் பாடல்களில் இலக்கிய உத்திகள், முனைவர் ரெ.சுதாகர்வடிவேலு | 79 |
| 22 | மரபுக்கட்டடக்கலையின் தொழில்நுட்பம் மா. சிதம்பரேஸ்வரர் | 88 |
| 23 | கற்றலில் காழினிது து.கோ.வரலட்சுமி | 95 |
| 24 | மடல் பாடிய மாரங்கீரனார் க.கந்தசாமி பாண்டியன் | 97 |
| 25 | மேலாண்மைப் பொன்னுச்சாமியின் 'ஈரம்' சிறுகதை உணர்த்தும் மொழி நடை, முனைவர் க. கனகலட்சுமி | 99 |
| 26 | தமிழர் பண்பாட்டில் அளவைகள், கு. நதியா | 102 |


ISSN (Online): 2321 – 5259, ISSN (Print): 2321 – 5739

Scanned by CamScanner

# வெற்றி வேற்கை கூறும் அறக்கருத்துக்கள்

முனைவர் க. சகாய கிரேஸி
உதவிப்பேராசிரியர்தமிழ்த்துறை,ஜெயராஜ்அன்னபாக்கியம்மகளிர்கல்லூரி,பெரியகுளம்.

**முன்னுரை:**

தமிழில் தோன்றிய நூல்களிலே மிக சிறப்பும் பழமையும் வாய்ந்தது திருக்குறளாகும். திருக்குறளின் கருத்துக்களை பின்பற்றியே, பல அறஇலக்கியங்கள் படைக்கப்பட்டன. அதில் வெற்றி வேற்கை ஒன்றே 82 பாடல்களை உடையது. கல்வியின் சிறப்பு, ஒழுக்கங்களின் மேன்மை, சான்றோர் இயல்பு, ஒவ்வொருவரும் வாழ்வில் பின்பற்றும் அறங்கள் என உண்மையாகவும் நுட்பமாகவும், எதார்த்துடனும் இந்நூலின் ஆசிரியர், அதிவீரராம பாண்டியர் உணர்த்துகின்றார்.

வெற்றி வேற்கை முதலில் நறுந்தொகை என்றே அழைக்கப்பெற்றது. அறம் மனித பாவத்தைப் போக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. தான் பெற்ற பொருளை ஒழிக்காது வறுமையில் வாடுவோர்க்குக் கொடுத்து இன்புற நினைத்தனர் அக்கால சான்றோர். முற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அறசெயலில் மட்டுமே தான் இன்புறுவதோடு, பெறுபவனையும் இன்புற வைக்கும் தன்மையுடையது. ஏழையின் சிரிப்பில் இறையைக் காணலம் என்ற தத்துவம் இந்த அடிப்படையில் எழுந்ததே எனலாம்.

அறம் என்பது பொன்னையும், பொருளையும் கொடுப்பது மட்டுமன்று வறியோனுக்குப் பொருள் கொடுப்பதும் பசித்தோனுக்கு உணவிடுவதுமே அறம் என்ற கருத்துண்டு. அறம் என்ற சொல்லுக்குப் பாரதி புதிய இலக்கணம் வகுக்கின்றான். இதனை,

**"அன்ன சாத்திரம் ஆயிரம் அமைப்பினும்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டினும்**
**அன்ன யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர்**
**ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவன்"**

(இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள் - முனைவர் ஆ.ஜெகதீசன், ப.129.)
பிற உதவிகளை காட்டிலும், கல்வி போதிப்பதே மிகப் பெரிய அறச்செயல் ஆகும்.

**கல்வியின் மேன்மையும், கல்வியின்மையினால் வரும் துன்பமும்:-**

உலகில் சிறந்த செல்வம் கல்வியே, கல்விக்கு ஈடுஇணை உலகில் ஏதுமில்லை எனுமளவிற்கு மேன்மையுடையது. அத்தகைய சிறப்புடைய கல்வியை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் இறைவனுக்கு சமம் என்கிறார் அதிவீரராம பாண்டியர்.

**"எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவன்" (கோ. பெ. நா. நீதிக்களஞ்சியம், வெற்றிவேற்கை, ப.21)**

ஒருவன் கல்வியை ஐயமின்றி கற்று பிறரிடம் பேசும் போது குற்றம் நீங்கும் படி பேசுதலே, சிறப்பாகும். அதுவே அவன் கற்ற கல்விக்கு அழகு என்கிறார்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே" (மேலது,ப.25)**

கல்வியை கற்க ஒருவனிடம் பொருள் உதவி இல்லையென்றால், பிறரிடம் இரந்து பொருள் பெற்றாவது கல்வி கற்க வேண்டும் என கடுமையாக தம் கருத்தை பதிவு செய்கிறார். மேலும், எந்த குடியில் பிறந்தவனாக இருப்பினும், அவன் கல்வி கற்றவனாக இருப்பின் அவனை அறிஞர்களும், உலகமும் போற்றி வரவேற்கும் என்கிறார்.

அதே சமயம், மேற்குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் கல்வி கற்காவிடில் கீழ்நிலையில் உள்ளவனே என்கிறார்.

**"நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன்**
**கற்றிலன் ஆயயின் கீழ் இருப்பவனே" (மேலது, ப.26)**

மேலும் கல்வி கற்காத ஒருவன், தனது குலத்தின் பெருமையை உயர்த்திப் பேசுதல் நெல்லினுள் இருக்கும் பதர் பெருமை பேசிக் கொள்வது போலாகும் எனவும் கூறுகிறார். ஒருவன் எதை இழந்தாலும் கல்வி பெறின் அனைத்து செல்வமும் அவனிடமே என்கிறார்.

ISSN (Online): 2321 – 5259, ISSN (Print): 2321 – 5739

Scanned by CamScanner

**சான்றோர் இயல்பு:**

சான்றோர்களின் நல்ல நூல்களைக் கற்று அவற்றின் உண்மைப் பொருளை அறிந்து தீமையை போக்கி, நன்மைகளை செய்து தமக்கு கிடைத்ததை வைத்து மகிழ்ந்து, பொருளின் பற்றை நீக்கி, தன்னை ஒருவழிப்படுத்தி வாழ்க்கை வாழ்வர் உயர்வும் தாழ்வும் அவரவர் செய்யும் தொழில் திறமைக்கேற்பவே அமையும் என்கிறார். மேலும், ஆழ்கடலை எப்படிக் கலக்கினாலும் கலங்கிச் சேறாகாது. அதுபோல பெரியோரைக் எப்படிக் குழப்ப முயன்றாலும், தெளிவாகவே இருப்பர்.

**''சிறியோர் பெரும் பிழை செய்தனர் ஆயின்**
**பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே''** (மேலது,ப.25)

என்கிறார். அதாவது, பண்பில் குறைந்த சிறியோர் பெரிய தவறுகளைச் செய்து விட்டாலும் உயர்ந்தோர் அந்த தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல் அரிது எனவும் என்கிறார். இக்காலகட்ட சூழலில் பொறுத்தல் என்பதே அரிதாகிப் போனது. இதுபோன்ற இலக்கியங்களை கற்கும் போது, மனித மனமானது பண்படும்.

**''அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது**
**சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது**
**அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது''** (மேலது,ப.24)

பசுவின் பாலை எவ்வளவு சுண்டக் காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது அதுபோல சான்றோர் துன்பமுற்றாலும் பண்பாடு மாறமாட்டார்கள். பொன்னை உருக்கினாலும் அதன் ஒளி மங்காது இருப்பது போல் இருப்பர். சந்தனக் கட்டையை எவ்வளவு தேய்த்தாலும் மணம் குறையாது அதுபோல பெரியோரைத் துன்புறுத்தினாலும் பண்பால் உயர்ந்து நிற்பர். எனவும் கூறுவதனை நோக்கும் போது ஒரு சான்றோர் எவ்வாறு இருக்க வேண்டும் எனவும்? இருந்தார் எனவும் தெளிவாக குறிப்பிடுகிறார். நல்லார் ஒருவர் உளரேல் பொய்யும் மழை என்கிறார் திருவள்ளுவர் மகான். ஒருநாட்டின் செல்வமே அந்நாட்டில் வாழக் கூடிய நல்லவர்களாலே வருகிறது என்று நம்பினர். அதன்படியும் வாழ்ந்தனர். இன்றைய நிலையிலும் இந்நிலை தொடருமாயின் அறங்கள் பெருகி பாவம் தொலையும்.

சான்றோர்களிடம் ஒரு நாள் பழகினாலும் அவர்கள் நட்பு நிலத்தைப் பிளந்து ஆடிச் சென்று நிலைக்கும் வேர்போல நிலைக்குமென்கிறார். அதேகணம் கீழோர் நட்பு, நீரில் மிதக்கும் பாசிபோல வேர்பிடிக்காது நூறு ஆண்டுகள் ஆனபோதும் என்கிறார்.

**நீதியின் தன்மை:**

தவறுவது மனித இயற்கை தவறியவறை சரியாக தண்டிப்பதும், தவறு செய்யா தண்டிக்காமல் இருப்பதுமே சிறந்த நீதி. அத்தகைய நீதி முறையினை வெற்றி வேற்கையும் அறிவுறுத்துகின்றது.

**''இருவர் தம் சொல்லையும் எழுதரம் கேட்ட**
**இருவரும் பொருந்த உரையார் ஆயின்,**
**மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர்தாம்**
**மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்**
**முறையுறத் தேவர் மூவர் காக்கினும்**
**வழிவழி ஈர்வது ஓர்வாள் ஆகும்மே''** (மேலது,ப.31)

வழக்கின் நடுவராய் இருப்பவர். வழக்காளிகள் கூறும் வழக்குகளைப் பலமுறை கேட்டு நன்கு ஆராய்ந்து இருவரும் ஒப்பும் வகையில் தீர்ப்பு அமைய வேண்டும். இதில் தவறு ஏற்பட்டால் தீர்ப்பு நியாயம் இழந்தவர் அழும் கண்ணீரானது, மூன்று தேவர்களும் காத்தாலும் கூட, ஏழு தலைமுறைக்கும் மரபு அழியும் கூர்வாளாக அமைந்து விடும் என்கிறார். தவறாக தீர்ப்புக்கூறும் போது, தன் தலைமுறையே கெடும் என கவனமாகி இருக்க நம்மை அறிவுறுத்துகிறார். இத்தகு எண்ணமும், கொண்டு இன்று நாம் அனைவரும் வாழ்ந்தால் நீதியானது நிலைக்கும். நாடும் நாட்டும் மக்களுக்கு காக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

**தேவையான பிற அறங்கள்:**

கஞ்சர்கள் பெருஞ்செல்வம் உடையவராயினும் ஒருவருக்கும் பயன்படமாட்டார் எது போலவெனில், இனிய பனைமரத்தின் பெரிய பழத்தில் உள்ள பெரிய விதை, முளைத்து வானளாவ ஓங்கி வளர்ந்து நிற்பினும் ஒருவர் நிற்கவும் நிழல் தராது. குறைந்த செல்வம் பெற்றவர்கள் ஆலமரம் போல் பிறர்க்கு உதவுவார்கள். நல்ல பெருமை புகழ் உடையவர் ஒருநாள் கொடுங்கோலாட்சி புரிகின்ற அரசர்கள் ஆளும் நாட்டை விட வாழ்வதற்கு காடே மேலானது.

**''குடி அலைத்து இரந்து வெங் கோலொடு நின்ற**
**முடியுடைய இறைவனாம் மூர்க்கனும் பதரே''8**(மேலது,ப.29)



Scanned by CamScanner

குடிமக்களைத் துன்புறுத்தி வரிகளைப் பெற்று ஆட்சி செய்யும் கொடுங்கோல் முடிமன்னனும் பதராவான். மேற்கூறிய அறங்கள் குடிமக்களை துன்புறுத்தக்கூடாது. கொடுங்கோலாட்சி கூடாது மக்களை மதித்தல் வேண்டும் போன்றன அறங்களை மேற்கொண்டாலே நாம் நாடு முன்னேற்றத்தைக் நோக்கி நடைபோடும். அடுத்தவர் பொருளின் மீது ஆசைவைத்தும் ஆசைப்பட்டாலும் அறமாகாது. பிறர்க்கு மனதில் கூட துன்பம் நினைத்தால் தண்டிக்கப்படுவோம் என்பதையே அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற கூற்றின்படி மக்கள் அனைவரும் அறவழியில் நடந்தால என்றுமே அழிவில்லை என்கிறது அறநூல்கள்.

**ஆசிரியரின் அறக்கருத்து:**

எல்லோரும் நல்லவராக இருந்தால் மட்டும் போதாது எல்லாரும் செல்வராக மட்டும் இருந்தால் போதாது வல்லவராக இருத்தல் வேண்டும். மக்களைக் காக்க வேண்டியது அரசனின் கடமை காக்காத நீதி தவறிய அரசன் பதருக்கு சமமாவான். குடிமக்களை துன்புறுத்தக் கூடாது, நோயால் வருந்துபவர்க்கு எதுவும் எதிர்பார்க்காமல் உதவ வேண்டும். கல்வியின் இன்றியமையாமை பற்றியும், கல்லாதவன் படும் துன்பம் பற்றியும், ஒழுக்கமே மனிதனை நல்வழிப்படுத்துமென்றும் அறிவுறுத்துகிறார்.

**முடிவுரை:**

நல்ல ஒழுக்கங்களை கற்று அதன்படி வாழ நேரிடும் போது நாட்டில் தீமை அகன்று நன்மை பெருகுகிறது. அறத்தோடு வாழும் வாழ்க்கை அவனை மட்டுமல்லாது நாடடையே உயர்த்தும் அதக்காகத்தான், அக்கால சான்றோர், வாழ்வியலுக்கு தகுந்த நெறிமுறைகளை தொகுத்து அறநூல்களாக தந்துள்ளனர். அதன்படி வாழ நாம் அனைவரும் பழகிக், கொண்டால் நாட்டில் நிலையே புரட்டி போடுமளவிற்கு அறஇலக்கியங்களுக்கு வலுவுண்டு. அத்தகைய வலு கொண்டு மனித மனங்களை வென்று நாட்டினை மட்டுமல்ல அதன்படி வாழ்வோம். வாழ்விற்கு அர்த்தமளிப்போம். நம்மையே வெல்ல ஆள அறஇலக்கியம் கற்போம்.

ISSN (Online): 2321 – 5259, ISSN (Print): 2321 – 5739

Scanned by CamScanner